# மாதர் போதினி

No. 260 செப்டெம்பர் 1919 No. 9


## PRAYING ALONE

## தனி ஜெபம்

கடந்த பத்திரிகையில் 'தேவனோடு தனியே' என்பதைத் தியானித்தோம். தேவனோடு தனித்திருந்தவர்களுக்கு மாத்திரந்தான் தனி ஜெபம் என்றால் என்னவென்று தெரியும். இவ்வித அனுபோகமில்லாத சகோதரிகள் முதலாவது ஜூலைமாதப் பத்திரிகையை எடுத்து 'தேவனோடு தனியே' என்ற சங்கதியைக் கவனித்து வேதாகமத்தைக் கையிற்கொண்டு தனித்த ஓரிடத்திற் போய் உட்கார்ந்து குறிப்பிட்டிருக்கும் வசனங்களை ஆதாரமாக வாசித்து, அடையும் போதனைக்குக் கீழ்ப்படிந்து அந்தப் பிரகாரம் செய்த பின், 'தனி ஜெபம்' என்ற பெயராலழைக்கப்படும் இந்த சங்கதியை வாசிக்கத் துவங்கவேண்டியது.

அநேகர் சாப்பிடு முன்னும், சாப்பிட்ட பின்னும், இரவில் படுக்கைக்குப் போகுமுன்னும், அதிகாலையில் எழுந்தபின்னும், ஆராதனை துவங்குமுன்னும், முடிந்தபின்னும் வழக்கமாய் ஜெபித்து இதுவே தனி ஜெபமென்று எண்ணுகிறார்கள். இப்படிச் செய்வது தப்பிதமல்ல ; ஆனால் இது தனி ஜெபமாகாது.

தனி ஜெபஞ் செய்ய முதலாவது பிரத்தியேகமான தனி இடம் அவசியம். இயேசுரட்சகர் கற்பித்தபடி கதவு பூட்டப்பட்ட அறை வீட்டிலாவது (மத். 6[6]), அவர் காட்டின மதிரிப்படி மலைமேலாவது (மாற். 6[46].), வனாந்தரத்திலாவது (லூக். 5[16]), தோட்டத்திலாவது (யோ. 18[2]), தானியேலைப்போலும் பேதுருவைப்போலும் மேல் வீட்டிலாவது (தானி. 6[10], அப். 10[9]), அன்னாளைப்போலும் எசேக்கியாவைப்போலும் தேவாலயத்திலாவது (1 சாமு. 1[12], எசா. 37[14-20]) தனித்து ஜெபிக்கவேண்டும். உனக்கென்று ஓர் அறை இருக்குமானால் அதற்குள் தனித்துப்போய்க் கதவைப் பூட்டிக்கொண்டு ஜெபித்திருக்கிறாயா? மலையில் குடியிருக்கவோ, ஓர் குன்றுக்

கருகில் வாசஞ்செய்யவோ, விடுமுறை நாட்களில் மலைக்குப் போகவோ உனக்கு சிலாக்கிய மிருக்குமானால், மலைமேல் தனித்து ஜெபித்திருக்கிறாயா? உனக்கு நாட்டுப்புறத்திலோ, கடல் நதி யருகாமையிலோ வீடிருக்குமானால், காட்டிலாவது மணலிலாவது தனித்திருந்து ஜெபித்திருக்கிறாயா? உனக்குத் தோட்ட வீடாவது நந்தவனமாவது இருக்குமாகில், அல்லது ஓர் சோலைக்கருகில் நீ குடியிருப்பாயாகில், தனித்துத் தோட்டத்தில் ஜெபித்ததுண்டா? உனக்கு மெத்தை வீடுண்டானால் முதல் மெத்தையிலோ, இரண்டாம் மெத்தையிலோ, மூன்றும் மெத்தையிலோ ஏறிப்போய்த் தனித்து ஜெபித்ததுண்டா? ஆராதனை துவங்க வெகுநேரத்திற்கு முன்போ, ஆராதனை முடிந்தபின்போ, மற்ற நேரத்திலோ நீ தேவாலயத்தில் தரித்திருந்து விண்ணப்பஞ் செய்திருக்கிறாயா? உனக்கு இவ்வித சிலாக்கியம் எதுவுங் கிடையாவிட்டாலும் நமது அருமை இரட்சகரைப்போல் இரவில் விழித்திருந்து (லூக். 6[12]) ஜெபித்திருக்கிறாயா? ஆ! இந்த தனி ஜெப வேளை மகா பாக்கியத்தை விளைக்கும் இன்பவேளை! சகோதரியே இவ்வித பாக்கியம் உனக்குண்டா?

தனி ஜெபஞ் செய்ய இடந்தெரிந்துகொள்வதுமன்றி சமயத்தையுந் தெரிந்துகொள்வது அவசியம். ஓர் சிநேகிதியோடு தனித்துப் பேசவேண்டுமானால் இருவருக்கும் சாவகாசமான நேரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர் எந்தநேரத்திலும் ஆயத்தமாயிருக்கிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மைநோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங். 145[18]). அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன், அவர் என் சத்தத்தைக் கேட்பார் (சங். 55[17]). உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன் (சங். 119[62]). நமது ஆண்டவருக்கு எப்போதும் சமயமுண்டு. நமது வருகைக்காக எப்போதும் காத்திருக்கிறார். சரியான ஆயத்தத்தோடிருக்கிறார். நாம் தனித்துப்போனவுடன் அங்கு வந்திருக்கிறார், நம்மை எதிர்கொண்டு வரவேற்கிறார். நமது தேவனைத் தனித்துச் சந்திக்க நாம் தான் வேளை தெரிந்து ஆயத்தஞ் செய்யவேண்டும். அதிகாலையில் விழித்தவுடனே, நமது மனம் பல எண்ணங்களால் நிறையுமுன் இயேசுரட்சகரைக் கண்டு சந்திக்கலாம். அவரே 'அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்' என்கிறார். கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர், காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகிக் காத்திருப்பேன் (சங். 5[3]). தனி ஜெபத்திற்கு ஏற்ற விசேஷித்த நேரம் காலை. அதிகாலையில் எழுந்து ஜெபிப்பது கஷ்டமா

யிருந்தாலும், உண்மையான வாஞ்சையும் பிரயாசையுமிருக்குமாகில் ஆண்டவரே நம்மைக் காலைதோறும் எழுப்புவார் (ஏசா. $50^{4}$). சோம்பலுக் கிடங்கொடாமல் முழங்காற்படியிட்டு ஜெபிப்பது நலம். சரீர பெலவீனமிருக்கும்போது உட்கார்ந்துகொண்டு ஜெபிக்கலாம். வியாதி காலத்தில் படுக்கையிலிருந்தே ஜெபிக்கலாம். காலையில் செய்யும் தனி ஜெபத்தால் வரும் பெலனும் பலனும் கணக்கற்றவை. தனி ஜெபஞ் செய்கிறவர்களைத் தவிர மற்றவர்கள் இவைகளை உணர்ந்துகொள்ளமுடியாது. நமது இரட்சகர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து தனித்துப்போய் ஜெபஞ் செய்திருப்பது நமக்கு ஏற்ற முன்மாதிரியாகும் (மாற். $1^{35}$). காலை நேரமன்றி மற்ற எந்த நேரத்திலும் தனி ஜெபஞ் செய்யலாம். இதற்காகத் தனித்த இடந் தேடி நேரஞ் செலவழிக்கவேண்டும்.

சரியான தனி ஜெபஞ் செய்யவேண்டுமானால் ஏற்ற ஆயத்தம் வேண்டும். தனி ஜெபம் துவக்குமுன் தேவனோடு தனியே இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவனைத் தனியே கண்டு பிடிக்க வேண்டுமானால், பிறரோடு சமாதானமாயிருக்கவேண்டும். இதற்காக மனுஷருக்கு விரோதமாய்ச் செய்த குற்றத்தை அவர்களிடம் அறிக்கையிட்டு மன்னிப்புப் பெறுவதுமன்றி, அவர்கள் உனக்கு விரோதமாய்ச் செய்த குற்றம் எப்பேர்ப்பட்டதாயிருப்பினும் அதை மன்னித்திருக்கவேண்டும் (மத். $6^{14, 15}$; மாற். $11^{25}$; மத். $5^{23, 24}$). மனுஷரோடு சமாதானமாயிருக்கிறாய் என்ற உறுதியடைந்த பின் தேவனோடு சமாதானமாயிருப்பது அவசியம். இந்த சமாதானம் இயேசுகிறிஸ்து மூலமாய் உனக்கு உண்டாயிருக்கிறது. இது இலவசமான ஈவு என்பதைத் தியானி. நமது பாவங்களோடு தேவ சமுகத்தைக் காண்பதரிது. பாவம் திரைபோல் தேவனை நமக்கு மறைத்துவிடுகிறது. நீ தேவனுக்கு விரோதமாய்ச் செய்த பாவம் எவ்வளவு பெரிதாயிருந்தபோதிலும் கிறிஸ்துவின் இரத்தத்தால் அது பரிகரிக்கப்படுகிறது என்பதைத் தியானி. உன் பாவ அகோரத்தையும் கிறிஸ்து உனக்காக என்ன செய்திருக்கிறார் என்பதையும் சிந்தனை செய். தேவனிடத்தில் சேரும் வழி கிறிஸ்துவேயாதலின், உடனே தேவ சமுகத்தைக் கண்டுகொள்வாய் (எபே. $2^{17-18}$, ரோமர் $5^{1}$). இவ்விதமாய்த் தேவனைத் தனித்துக் கண்டுபிடித்து உன் தனி ஜெபத்தைத் துவக்கு. அப்போதுதான் நீ சரியான தனி ஜெபஞ் செய்வாய். உன் பாவங்களையும் கிறிஸ்துவின் அன்பையும் தியானிக்கிறதற்கு ஏதுகரமாக தேவ வசனங்களையும், பக்தர் எழுதிய தியானப் புஸ்தகங்களையும் பாடல்களையும் உபயோகிக்கலாம். இதுவே தனி ஜெபஞ் செய்ய ஏற்ற ஆயத்தமாகும்.

இவ்வித ஆயத்தத்திற்குப் பின் ஜெபத்தைத் துவக்கு. ஜெபமென்ருல் நாம் போனவருஷப் பத்திரிகையில் கண்டபடி, விண்ணப்பம் மாத்திரமல்ல, வணக்கமும், ஸ்துதி தோத்திரமும், பாவ அறிக்கையும், தியானமும், அவர் சமுகத்தில் அமர்ந்திருப்பதுமாகும். துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது (சங். 32[5], சங். 34[1], 118[1], 147[1]). பாவ அறிக்கை செய்வது தேவனுக்கு உகந்த பலியாகும் (சங். 51). தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் (லூக். 18[13]). நாம் தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்யக் கட்டளையிடுகிருர். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் (மத். 7[7]). என் நாமத்திஞலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோ. 14[14]). கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் (யோ. 14[13,14]). நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும். என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன் (சங். 63[6]). தேவனை நோக்கி அமர்ந்து காத்திருக்கவேண்டும் (சங். 31[24], 42[11], 43[5], 62[5]).

இவ்வித தனி ஜெபஞ் செய்துவருவோர் தங்களுக்கும் பிறருக்கும் பெரிய ஆசீர்வாதமாயிருப்பார்கள். அவர்கள் ஜீவியம் அழகாயிருக்கும். கிறிஸ்துவின் சாயலும் ஒளியும் அவர்களில் காணப்படும். அவர்கள் வேலையில் மிக்கப் பலனிருக்கும். இதுவே ஜெய ஜீவியம், உன்னத கிறிஸ்தவ ஜீவியத்துக்கு வழி.

நீ இவ்வித தனி ஜெபஞ் செய்யாமல் கூட்டங்களிலாவது, கோவில்களிலாவது, மற்ற இடங்களிலாவது பிறர் முன் ஜெபிப்பாயாகில் உன் ஜெபத்தால் யாதொரு பிரயோஜனமுமிராது. இவ்வித தனி ஜெபஞ் செய்வோரே பிறர்முன் ஜெபிக்கத் தகுதியானவர். சகோதரியே ஆராய்ந்துபார். உனக்கு இவ்வித பழக்கமில்லாவிடில் உடனே துவக்கு, தாமதியாதே. எண்ணற்கரிய பலன் பெறுவாய்.

## A PREVENTIVE TO INFLUENZA

## கடூர சளிச்சுரத்தை **(Influenza)** தடுப்பதற்கு, மூக்கைக் கழுவும் விதமும் அதின் பிரயோசனமும்

கடூர சளிச்சுரம் (Influenza) வராமல் தடுப்பதற்கு மூக்குத் துவாரங்களையும் தொண்டையையும் கழுவுவது நலம் என்று சர்க்காரார் சிபாரிசு செய்கிருர்கள். கழுவும் விதத்தைப்பற்றி அடியில்

வரும் விவரம் யாவருக்கும் தெரியும்படி வெளியாக்கப்பட்டிருக்கிறது:—

(a) ஒரு தேயிலைக்கரண்டியளவு உப்பை ஒரு பைன்டு வெந்நீரில் கரைத்துக்கொள்;

(b) உப்புக்கரைத்த நீரில் கொஞ்சம் எடுத்து தொண்டையில் படும்படி வாயால் அலசிக் கொப்புளிக்கவும்;

(c) பாக்கியிருக்கும் உப்புக்கரைத்த நீரை ஒரு சட்டியில் வார்த்துக்கொள்;

(d) அந்த உப்புக்கரைத்த நீரில் மூக்குத்துவாரங்களை அமிழ்த்து;

(e) தொண்டையில் போய்ப் படுமட்டும், மூக்குத்துவாரங்களின் வழியாய் உப்புக்கரைத்த நீரை உள்ளே சுவாசமூலமாயிழுக்கவும்;

(f) பின்பு சட்டியிலிருந்து தலையை மேலே தூக்கி மூக்குத் துவாரங்களிலுள்ள நீர் சட்டியில் விழும்படிச் செய்;

(g) இவ்விதமாய், ஒரு தடவைக்கு இரண்டு மூன்று தரம் செய்யவும்.

இவ்விதிகளின்படி தினந்தோறும் நான்கு அல்லது ஐந்து தரம் செய்யவேண்டும். தென் ஆபிரிக்காவில், கடைசியாய் இக்கொள்ளை நோய் பரவியிருந்த காலத்தில் மேற்கூறிய முறையைக் கையாடி வந்ததில் அதிக நன்மையுண்டானதாகக் கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக, இந்தத் தொத்துவியாதிக்காரர்களோடு கூடவேயிருந்த, பெரும்பாலும், வியாதிக்காரர்களுக்கு உபசாரணைசெய்யும் பெண்களாகிய 91 பெயர்களில் மூன்று பெயர்களுக்குமட்டுந்தான் இந்த வியாதி கொஞ்சம் இலகுவாய் வந்தது.

## PEACE WITH GERMANY

## ஜர்மானியரோடு சமாதானம்

சென்றவருஷம் பிற்பகுதியில், ஜர்மானியர்கள், துணையரசர்களோடு எதிர்த்துச் சண்டைசெய்து தடுக்க இனி முடியாது என்று அறிந்து, சமாதானப்பேச்சு ஆரம்பிக்கவேண்டுமென்றும், சமாதான நிபந்தனைகள் பேசி முடிவுபெறுவதற்கிடையில் சண்டைசெய்வதை நிறுத்திவைக்கவேண்டுமென்றும் அவர்கள் கேட்டது நமக்கெல்லாம் ஞாபகமிருக்கிறது. ஜர்மானியர்கள் நல்ல எண்ணத்தோடு கேட்கிறார்களென்று துணையரசர்கள் நம்பவில்லை. ஜர்மானியர்களுக்குக் கொஞ்சம் ஓய்வுநாள் கொடுத்தால் அதிகமாய் தங்களைப் பலப்படுத்திக் கொள்வார்களோவென்று பயந்தார்கள். ஆகையால், ஜர்மானியர்கள் இனிச் சண்டை மறுபடியும் ஆரம்பிக்கக்கூடாதபடி சில நிபந்

தனைகளைச் சொல்லி அந்நிபந்தனைகளுக்கு அவர்கள் உடனே ஒத்துக் கொண்டாலொழிய, சமாதானத்திற்காக சண்டை நிறுத்திவைத்தல் கூடாத காரியமென்று துணையரசர்கள் சொன்னார்கள். ஆனபடியால், ஜர்மானியர் தங்கள் போர்க்கப்பல்களில் பெரும்பாகத்தையும், பீரங்கிகளையும், ஆகாயக்கப்பல்களையும், சண்டைசெய்ய அவர்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் அவர்கள் கொடுத்துவிடும்படியும், அவர்களுடைய சேனைகளை, அவர்கள் படையெடுத்துச்சென்றிருந்த தேசங்களிலிருந்து தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோகும்படியும், கூட்டரசர்களின் சேனைகள், ஜர்மானியதேசத்தில், ரயின் நதிக் கரைவரையிற் சென்று அதைக் கடந்துசெல்ல அவர்கள் அனுமதி கொடுக்கவேண்டுமென்றும், இதற்கிடையில், பிரித்தானிய போர்க் கப்பல்கள், ஜர்மானியதேசத்தில் ஜனங்கள் பிழைத்திருக்கவேண்டிய சாமான்கள் தவிர மற்றச் சரக்குகள் அத்தேசத்தில் இறக்குமதியாகாதபடி தடுத்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தினார்கள். இந்த நிபந்தனைகள் மிகவும் கடுமையானவைகள் தான். ஆனால் ஜர்மானியர்களுக்கு வேறு வழியில்லாததினால் அவைகளை ஒப்புக்கொண்டார்கள். ஜர்மானியரின் உடன்படிக்கையின்படியே, அந்நிபந்தனைகளை நிறைவேற்றும்படி துணையரசர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினார்கள். அதுமுதல், துணையரசர்களின் முடிவுகளைத் தடுத்துக்கூற ஜர்மானியர்கள் சக்தியற்றவர்கள் ஆனார்கள்.

2. இவ்வாறு ஜர்மானியரைப்பற்றிய பயமெல்லாம் அடியோடு நீக்கப்பட்டபின், சமாதானம் செய்வதற்கு வேண்டிய நிபந்தனைகள் இன்னவையென்று துணையரசர்கள் ஆலோசிக்க ஆரம்பித்தார்கள். உலகமுழுவதும் அநேக தேசத்தார்கள் சண்டைசெய்வதில் சம்பந்தப்பட்டிருந்தபடியால், நிபந்தனைகள் இன்னவையென்று முடிவுசெய்வது மிகவும் கஷ்டமான காரியமாயிருந்தது. தேசத்தின் பெரும் பாகங்கள் பாழாக்கப்பட்டுப்போயிருந்தது. ஜர்மானியராலும், ஆஸ்திரியராலும், துருக்கியராலும், முன்னடக்கி ஆளப்பட்டுவந்த பல ஜாதியார்கள், இப்பொழுது தாங்கள் விடுவிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எல்லாருக்கும் நியாயம் கிடைக்கும்படி செய்ய, துணையரசர்கள் நன்றாய் விசாரணைசெய்து அநேக மாதங்களாக யோசனைசெய்து, கடைசியாய், சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை முடிவுசெய்து எழுதினார்கள். பிறகு துணையரசர்கள், அந்நிபந்தனைகளை ஜர்மானியர்களின் பிரதிநிதிகளிடம் கொடுத்து அவர்களுக்குள்ள ஆட்சேபனைகளைச் சொல்லும்படிக் கேட்டார்கள். அவர்களுடைய ஆட்சேபனைகளை யோசித்துப்பார்த்து, முதலில் ஏற்

படுத்திய நிபந்தனைகளைக் கொஞ்சம் மாற்றி, பின்பு மாற்றப்பட்ட நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளும்படி, ஜர்மானியரைக் கேட்டுக்கொண்டார்கள். இந்நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள முடியாதென்று ஜர்மானியர்கள் உரக்க ஆட்சேபித்தார்கள். ஆனால் துணையரசர்கள், சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை இன்னும் மாற்ற உடன்படமாட்டார்களென்றும், தடுத்து ஆட்சேபிக்கத் தங்களுக்கு சக்தியில்லையென்றும் கண்டறிந்தார்கள். ஆகையால், ஜர்மானியர்கள், ஏற்பட்ட நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள்.

3. சமாதான நிபந்தனைகளை முடிவுசெய்வதில் துணையரசர்கள் கொண்டிருந்த நோக்கங்கள் என்னவென்றால், ஜர்மானியர்கள், மற்ற தேசத்தார்களை பயப்படுத்தவாவது தாக்கவாவது கூடிய நிலைமையில் அவர்கள் மறுபடியும் இருக்கக்கூடாதென்பதும், ஜர்மானியர்கள் மற்றத் தேசத்தார்களுக்கு உண்டாக்கிய நஷ்டங்களை, அவர்கள் சொத்தளவிற்குத் தக்கபடி அவர்கள் கொடுக்கவேண்டுமென்பதை நிச்சயப்படுத்தவேண்டுமென்பதும், சண்டை நடக்கும் காலத்தில் குரூரமான செய்கையாவது, சட்டவிரோதமான செய்கையாவது செய்திருந்த குற்றவாளிகளை, நியாயப்படி தண்டிக்கவேண்டுமென்பதும், ஜர்மானியராலும் அவர்களின் துணையரசர்களாலும் நியாயவிரோதமாய்த் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டிருந்த தேசத்தார்களையும், ஜாதியார்களையும், அவர்களிடமிருந்து விடுவித்து, அவர்களைத் தாங்களே தங்கள்தங்கள் இராஜ்யங்களை ஆண்டுகொள்ளும்படி விடவேண்டும், அல்லது அவர்கள் யாரோடு சேர்ந்திருக்க விரும்புகிறார்களோ, அத்தேசத்தரசர்களோடு அவர்கள் சேரவேண்டுமென்பதை நிச்சயப்படுத்த வேண்டுமென்பதுமேதான்.

சமாதானத்தின் மிகவும் முக்கியமான நிபந்தனைகள் அடியில் வருவனவைகளே :—

**தேசக்கூட்டுறவுச் சட்டவிரோதமான குற்றம் செய்தவர்களைத் தண்டித்தல்.**—தேசக்கூட்டுறவுச் சட்டத்திற்கும், உடன்படிக்கைகளின் தெய்வீகத்திற்கும் விரோதமாய் செய்த குற்றத்திற்காக, **கேய்சர்** நியாயவிசாரணைக் குள்ளாக்கப்படுவார். போர்செய்யும் சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் விரோதமாய், குரூரமும் சட்டவிரோதமுமான செய்கைகளைச் செய்த ஜர்மானியர்கள், போர்க்குரிய நியாயசபையாரால் விசாரணை செய்யும்படி, துணையரசர்களிடம் ஒப்புவிக்கப்படுவார்கள்.

**கீழாக்கப்பட்ட ஜாதியார் முதலியவர்களை விடுதலை செய்வித்தல்.**—ஏறக்குறைய 50 வருஷங்களுக்குமுன் பிரான்சு தேசத்தா

ரிடமிருந்து, ஜர்மானியர் கைப்பற்றியிருந்த அல்சாஸ் லோரேயின் என்னும் மாகாணத்தை பிரான்சியருக்கு ஜர்மானியர் திரும்பவும் விட்டுவிடவேண்டும்; அல்சாஸ் லோரேயின் என்பது இந்த இராஜதானியிலுள்ள ஒரு ஜில்லா அவ்வளவு விஸ்தீரணமுள்ளது. அதில் 20 லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள்; அநேக ஐஸ்வரிய முள்ள பட்டணங்களுமுண்டு. 50 வருஷங்களுக்கு முன்னதாகவே, டேன்மார்க்கு தேசத்தார்களிடமிருந்து ஷேல்ஸ்விக் என்பதை ஜர் மானியர் கைப்பற்றிக்கொண்டார்கள். ஷேல்ஸ்விக் தேசத்தில் வட பாகத்திலிருப்பவர்களில் பெரும்பான்மையோர் டேனிஷ்காரர்கள். இப்பொழுது அவர்கள், தங்கள் தேசம் திரும்பவும் டேன்மார்க்கு தேசத்தோடு சேர்க்கப்படவேண்டுமா அல்லது ஜர்மானியர் தேசத்தின் ஒருபாகமாகவே இருக்கவேண்டுமா என்பதை, ஓட்டு மூலமாய் தங்க ளுக்குள்ளே தீர்மானித்துக்கொள்ளும்படி அனுமதி பெற்றிருக்கிறார் கள். சுமார் 100 வருஷங்களுக்கு முன்னதாகவே, ஜர்மானியர் போலண்டு தேசத்தாரிடமிருந்து கைப்பற்றியிருந்த தேசத்தை, அவர் களுக்கு ஜர்மானியர் விட்டுவிடுகிறார்கள். இந்த தேசம், இந்த இராஜ தானியில் இரண்டு அல்லது மூன்று ஜில்லாக்களின் விஸ்தீரணமுள் ளது. ஜர்மானிய துறைமுகப்பட்டணமாகிய டான்ஜிக் என்னும் நகரம், யாரும் போகக்கூடிய நகரமென்று விளக்கப்பட்டிருக்கிறது. போலண்டு தேசத்தார்கள், தாங்களும் அப்பட்டணத்தைத் துறை முகமாய் உபயோகிக்கலாமென்று அனுமதிபெற்றார்கள். செக்கோ ஸ்லோவாக் என்பவர்கள் முன்னால் ஆஸ்திரியரின் அரசாட்சிக் குட்பட்டிருந்தார்கள். சண்டை நடக்குங்காலத்தில் அவர்கள் ஆஸ்திரி யருக்கு விரோதமாய்க் கலகம்செய்து துணையரசர்களோடு சேர்ந்து சண்டைசெய்தார்கள். இப்போது, செக்கோ ஸ்லோவாக் என்ப வர்கள் ஒரு தனியான தேசத்தார்களென்று ஜர்மானியர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆபிரிக்கா தேசத்திலும் உலகத்தில் மற்றப்பாகங் களிலுமுள்ள ஜர்மானியரின் குடியேற்ற நாடுகளையெல்லாம் துணை யரசர்களுக்கு அவர்கள் விட்டுவிடவேண்டும். ஏறக்குறைய இரண்டு வருஷங்களுக்குமுன், ஜர்மானியர், உருஷியர்களை வென்று, அவர்க ளோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அச்சமா தான நிபந்தனைகளின்படி உருஷியா தேசத்தில் ஜர்மானியர்களுக்கு அதிக செல்வாக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. ஜர்மானியர் உருஷியாவில் அநேக சுதந்தரங்களும் பெற்றார்கள். அந்த உடன் படிக்கை இப்பொழுது ரத்துசெய்யப்பட்டது.

**சேதப்படுத்தியதற்கு நஷ்டங் கட்டிக்கொடுத்தல்.**—ஜர்மானி யர், பிரான்சுதேசத்தில் படையெடுத்துச் சென்றபொழுது, பிரான்சிய

ரின் நிலக்கரி சுரங்கங்களையெல்லாம் ஜர்மானியர் நாசமாக்கிவிட்டபடியால், இப்பொழுது, ஜர்மானியில், மிகவும் அதிகமான வரும்படியுள்ள சுரங்கங்களாகிய சார் பள்ளத்தாக்கிலுள்ள நிலக்கரி சுரங்கங்களில் தங்களுக்குள்ள பாத்தியதையை பிரான்சியர்களுக்கு, பதிலாக விட்டுவிடுகிறார்கள். சண்டை நடக்கும் காலத்தில், சாதாரண ஜனங்களுக்கும், அவர்களுடைய சொத்துக்களுக்கும் ஜர்மானியர் உண்டாக்கிய நஷ்டத்திற்காக, அவர்கள் பணம் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதில், கரைச்சேனைகளுக்கும் போர்க்கப்பல்களுக்கும் அவர்கள் உண்டாக்கிய நஷ்டம் சேரவில்லை. எவ்வளவு நஷ்டம் உண்டாயிருக்கிறதென்பதை விசாரித்துக் கண்டறிய, ஒரு **விசாரணைச்சங்கம்** ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுக்க வேண்டிய மொத்தத்தொகை இவ்வளவென்று பின்னால் குறிக்கப்படும். ஆனால் ஜர்மானியர்கள், இரண்டு வருஷங்களுக்குள்ளாக, 1,200 கோடி ரூபாய்கள் கொடுக்கவேண்டும். குறைந்தது, 4,800 கோடி ரூபாய்கள் பின்னால் ஜர்மானியர் கொடுக்கும்படி நேரிடுமென்று எண்ணப்படுகிறது. இந்திய இராஜாங்கத்தார்களுக்கு ஒரு வருஷத்திற்கு சுமார் 150 கோடி ரூபாய்கள்தான் வரி கிடைக்கிறது. சண்டையில் ஜர்மானியர் முழுகச்செய்த வியாபாரக் கப்பல்களுக்கெல்லாம் பதில் கப்பல்கள் கொடுப்பதாய் அவர்கள் சம்மதிக்கிறார்கள். ஆகையால் ஜர்மானியர் தங்கள் பெரிய வியாபாரக்கப்பல்கள் எல்லாவற்றையும், அவர்களுடைய சிறிய வியாபாரக்கப்பல்களில் பாதியும் அவர்களுடைய மீன்பிடிக்கும் கப்பல்களில் நாலில் ஒரு பாகத்தையும், உடனே, துணையரசர்களிடம் ஒப்புவித்துவிடுவார்கள். இவைகளெல்லாம் சேர்ந்து அவர்களுடைய நீர்க்குள்ளோடும் கப்பல்களால் முழுகச்செய்யப்பட்ட கப்பல்களின் தொகைக்குச் சரியாகாததினால், ஜர்மானியர், அடுத்த ஐந்து வருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 50 கப்பல்வீதம் புதிதாய்ச்செய்து, துணையரசர்களிடம் கொடுப்பார்கள்.

**ஜர்மானியர்களின் சேனைகளைக் குறைத்தல்.**—ஜர்மானியர்கள், ஒரு லட்சம் மனிதர்களடங்கிய ஒரு சேனைதான் வைத்திருக்கலாம். ஆனால், சண்டை நடக்கும் காலத்தில், அவர்கள் ஒருகோடி மனிதர்களுக்கு மேலேயே சைனியத்திற் சேர்த்து அவர்களைக் கொண்டு சண்டைசெய்வித்தார்கள். இந்தியாவில், சண்டைக்கு முந்தி, சுமார் ஒன்றரை லட்சம் இந்திய போர்வீரர்களை இந்தியாவிலேயே வைத்திருந்தார்கள். ஜர்மானியர் எதாகிலும் விஷக்காற்றையாவது, ஆயுதம் வைக்கப்பட்ட மோட்டார் வண்டிகளையாவது தாங்களே செய்யவாவது, பிறதேசங்களிலிருந்து வரவழைக்கவாவது

கூடாது. சண்டைக்கு வேண்டிய மருந்து குண்டு முதலிய தளவாடங்களை வேறு தேசங்களிலிருந்து வரவழைக்கக்கூடாது; அவர்களுடைய சேனையை போர்முனைக்கு ஆயத்தமாய் பழக்கித் தயார்செய்யவும், அவர்களுடைய ஜனங்களுக்கு இதுவரையிலும் செய்தது போல, கட்டாயப்படுத்தி போர்த்தொழில் பழக்கவும் கூடாது. ஜர்மானியர், ரயின் நதியிலிருந்து 30 மைல் தூரத்திற்குள், பாதுகாப்பிற்குரிய வலுத்த கோட்டைகள் முதலிய கட்டடங்களைக் கட்டக்கூடாது; ரயின்நதிக்கரையிலிருந்து அதே தூரத்திற்குள், ஜர்மானிய போர்வீரர்களை வைக்கவும் கூடாது. போர்க்கப்பல்கள் விஷயத்தில், சண்டைக்கப்பல்கள் 6, சிறு சண்டைக்கப்பல்கள் 6, அழிக்கும் கப்பல்களும் டார்ப்பிடோ படகுகளும் சேர்ந்து 24 தான் அவர்கள் வைத்திருக்கலாம். சண்டைக்கு முன்னால்கூட, ஆங்கிலேயர்களுக்கு, 29 சண்டைக்கப்பல்களும், 100க்கு அதிகமான சிறு சண்டைக்கப்பல்களும், 250 அழிக்கும் கப்பல்களுந்தானிருந்தது. இப்பொழுது அதிகமாயிருக்கிறது. ஜர்மானியர்கள், நீர்க்குள்ளோடும் கப்பல்களை வைத்திருக்கவாவது செய்யவாவது கூடாது. அவர்கள், சண்டைக்கு உபயோகப்படக்கூடிய ஆகாயக் கப்பல்களை செய்யவுங் கூடாது, வைத்திருக்கவுங்கூடாது. ஜர்மானிய தேசத்து கரையோரத்திற்கும் அவர்களுடைய போர்க்கப்பல்களுக்கும் முக்கியமான காப்பாயிருந்த எலிகோலாண்ட் என்னும் தீவிலிருந்த அரண்களையெல்லாம் இப்பொழுது அழித்துப்போடவேண்டியது.

ஜாமீன்கள்.—ஜர்மானியர் உடன்படிக்கையில் கண்ட நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றுவதை நிச்சயப்படுத்தும்பொருட்டு, ரயின் நதிக்கு மேற்கிலுள்ள ஜர்மானிய தேசமுழுதும், 15 வருஷகாலங்களுக்கு துணையரசர்களின் சேனைகள் வைக்கப்பட்டிருக்கும். ரயின் நதியின் பாலங்களெல்லாம் துணையரசர்கள் அதிகாரத்திற் குட்பட்டிருக்கும். இந்த தேசத்தில் வைக்கப்பட்டிருக்கும் துணையரசர்களின் சேனைகளுக்குண்டாகும் செலவு, ஜர்மானியர் கொடுக்கவேண்டும். ஜர்மானியர், உடன்படிக்கை நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றினால், துணையரசர்களின் சேனைகளை அத்தேசத்திலிருந்து சீக்கிரமாக நீக்கிவிடுவார்கள். துணையரசர்கள் இஷ்டப்பட்டால், அவர்கள் ஜர்மானியதேசத்தில் தாராளமாய்ச் சென்று வியாபாரம் செய்வதை ஜர்மானியர் இடையூறு செய்யாமல் தடுப்பதற்கு வேண்டிய நிபந்தனைகளும் இருக்கின்றன.

**தேச ஐக்கிய சங்கம்** (League of Nations).—ஒரு தேச ஐக்கிய சங்கம் ஏற்படுத்தப்படும். உலகத்தில் சமாதானம் நிலைநிற்கும்படி பாதுகாப்பதே அச்சங்கத்தின் நோக்கம். அச்சங்கத்தின் அங்கத்

தினர்கள், ஒருவர் மற்றொருவர் தேசங்களில் படையெடுத்துச் செல்லாதபடி தடுத்துக் காப்பாற்ற உடன்படுகிறார்கள். அவர்கள் ஒரு நியாயசபை ஏற்படுத்தி அந்த நியாயசபையார்முன், ஒரு தேசத்தாருக்கும் மற்றொரு தேசத்தாருக்குமுள்ள வழக்குகளை விசாரித்து சட்ட நிபந்தனைகளின்படி தீர்மானம் செய்யப்படும். அவர்கள் தங்களுக்குள், ஒவ்வொருவரும் வைத்திருக்கவேண்டிய சேனைகள், போர்க்கப்பல்கள் முதலியவற்றின் தொகுதி இன்னதென்று ஏற்பாடு செய்துகொள்ள சம்மதிக்கிறார்கள். இதைச் செய்துமுடித்தால், ஒவ்வொரு தேசத்தாருக்கும் அதிக பணம் மீதப்படும். ஏனென்றால், ஒவ்வொரு தேசத்தாரும், அயல்தேசத்தாரைவிட அதிக பலமுள்ளவர்களாகவேண்டுமென்னும் எண்ணத்தோடு சேனைகளையும் போர்க்கப்பல்களையும் விர்த்தியாக்க இதற்குமுன் அதிக பணம் செலவிட்டு வந்தார்கள். முதலில், **தேச ஐக்கிய கூட்டுறவுச் சங்கத்தில்,** ஜர்மானிய தேசத்தார் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை; ஆனால், அவர்கள் சமாதான நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றினார்களானால், அவர்களையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளலாம் என்று உத்தேசித்திருக்கிறார்கள்.

மேற்சொல்லிய விஷயங்களினால், துணையரசர்கள் ஜர்மானியரிடத்தில் போதுமான ஜாமீன் வாங்கியிருக்கிறார்களென்றும், ஜர்மானியர் சண்டையைப்பற்றி நினைக்க அநேக வருஷங்கள் வரையில் அவர்களால் ஒன்றும் முடியாதென்றும், நன்றாய்த் தெரிகிறது. அவர்கள் சேனையில் ஒரு லட்சம் போர்வீரர்கள்தானிருக்கிறார்கள். ஆனால், ஆங்கில சேனையில்மட்டும், சண்டை முடிவதற்குமுன், பிரான்சு தேசத்தில் 20 லட்சம் போர்வீரர்களிருந்தார்கள். போர்க்கப்பல்களில், அவர்களுக்கு, 6 பெரிய சண்டைக்கப்பல்களும், 24 அழிக்கும் கப்பல்களுந்தான் இருக்கின்றன. ஆங்கிலேயர்களுக்கோ, சண்டைக்கு முந்திகூட, 29 பெரிய சண்டைக் கப்பல்களும், 200க்கு மேலேயே அழிக்கும் கப்பல்களும் இருந்தன. சண்டை ஆரம்பித்தது முதல் இப்பொழுது, ஆங்கிலேயர் கப்பல்களின் தொகை ஏராளமாய் விர்த்தியாகி யிருக்கின்றது. மேலும், ஜர்மானியர் விட்டுக்கொடுத்த தேசத்தின் விஸ்தீரணம், சென்னை இராஜதானியின் மூன்று அல்லது நான்கு ஜில்லாக்களின் விஸ்தீரணத்திற்குச் சமமாகும். இதோடுகூட, அவர்களுக்கிருந்த குடியேற்ற நாடுகளையெல்லாம் அவர்கள் இழந்தார்கள். இத்தேசங்களில் அதிக செழிப்பான நிலமும், அநேக பெரிய பட்டணங்களுமிருக்கின்றன. ஜர்மானியர், சண்டைக்கு முன்னிருந்ததைவிட அதிக பலவீனமாகிவிட்டார்கள். இதுவுமன்றி, சண்டை காலத்தில், அவர்களுடைய

போர்வீரர்களில் 16 லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். இரண்டு வருஷகாலங்களுக்கதிகமாகவே அத்தேசத்து ஜனங்கள் பசியினால் வருந்தினார்கள். இவ்வாறு, ஜர்மானியர் சண்டை நடக்கும் காலத்தில் தாங்கள் பட்ட கஷ்டங்களை யெல்லாம் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். மறுபடியும் அக்கஷ்டங்களை அனுபவிக்க இஷ்டப்பட மாட்டார்கள்.

இன்னும், **ஆஸ்திரியரோடும், பல்கேரியரோடும், துருக்கியரோடும்** சமாதானம் முடியவில்லை. இதற்குக் காரணம், அத்தேசத்தார்கள் சமாதானம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லை யென்பதாவது, துணையரசர்கள் கேட்பதைத் தடுப்பதற்குச் சக்தியுள்ளவர்களென்று நினைப்பதாவதல்ல. இத்தேசத்தார்கள் ஜர்மானியரைவிட அதிக பலக்குறைவானவர்கள். அவர்களோடு சமாதான நிபந்தனைகளை எற்பாடு செய்துகொள்ளுவது அதிக கஷ்டமாயிருக்கிறது. ஏனென்றால், முன்னால் இத்தேசத்தார்களுக்கு உட்பட்டிருந்த அநேக தேசத்தார்கள், இப்பொழுது சுயேச்சையான தேசத்தார்களாக ஒப்புக்கொள்ளப்படவேண்டுமென்று விரும்புகிறார்கள். பலதேசத்தார்களுக்குள்ள வழக்குகளை விசாரித்துத் தீர்மானம் செய்து அவர்களுடைய எல்லைத்தகராரை நியாயப்படி தீர்ப்பதற்கு துணையரசர்களுக்கு அதிக கஷ்டமாயிருக்கிறது. இப்பொழுது ஜர்மானியரோடு சமாதானம் முடிந்துவிட்டது. இனி எல்லா வழக்குகளும் சீக்கிரம் தீர்ந்துபோகுமென்று நினைக்கிறோம்.

இப்பொழுது சண்டை முடிவாகிவிட்டது. ஆனால் சண்டையில் உண்டான சேதங்களை, இரண்டொரு நாளையில் சரிப்படுத்த முடியாது. சண்டை நடக்குங் காலத்தில், எல்லா மனிதர்களும், எல்லா தளவாடங்களும், எல்லா யந்திரங்களும், சண்டைக்கு அல்லது போர்முனைக்கு உபயோகமுள்ள ஆயுதம் முதலானவைகள் செய்வதில் வேலையாயிருந்தார்கள். சாதாரணமாய், மனிதர்களுக்கு வேண்டிய சாமான்களை உண்டாக்குவதில் வேலையாயிருந்தவர்கள் வெகு சிலரே. ஆகையினால், எல்லாச் சாமான்களும் அகப்படாமல், அவைகளின் விலையும் அதிகமாய்விட்டது. இப்பொழுது சண்டை முடிந்தது. மனிதர்களும், தளவாடங்களும், யந்திரங்களும், மறுபடியும், மனிதர்களுக்குச் சாதாரணமாய் வேண்டிய சாமான்களை யுண்டாக்குவதில் முயற்சியாயிருப்பார்கள். எல்லாச் சாமான்களின் விலையும், கொஞ்சங்கொஞ்சமாய் குறைய ஆரம்பிக்கும். ஆனால் சண்டையில் உண்டான நஷ்டத்தை சரிப்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். பெரும்பாகமான தேசங்களில், பட்டணங்கள் முழுதும் நாசமாக்கப்பட்டன; எல்லா வீடு

களும் இடிக்கப்பட்டன; தொழிற்சாலைகளிலுள்ள யந்திரங்களெல்லாம் உடைக்கப்பட்டன; சுரங்கங்களெல்லாம் அழிக்கப்பட்டன. ஐரோப்பாவின் மற்றப்பாகங்களில் ஆகாரத்தானியங்கள் செலவாகிவிட்டது; ஆடுமாடுகள் கொல்லப்பட்டன; ஜனங்களெல்லாம் பசியால் வருந்துகிறார்கள். ஐரோப்பாவில் உண்டான நஷ்டங்களெல்லாம் சரிப்படுத்தப்பட்டபிறகுதான், துணி, இரும்பு முதலியவற்றின் விலைகளும், ஐரோப்பாவிலிருந்து நமக்குக் கிடைக்கும் சாமான்களின் விலைகளும் அதி சீக்கிரமாய்க் குறையும். இப்பொழுது சமாதானம் உண்டாயிருக்கிறபடியால், விலைகள் குறைய ஆரம்பிக்கும் என்று நாம் நம்பலாம்.

## CHILDREN'S PAGE—பாலர் பக்கம்

## THE BOY MARTYR

## சின்ன இரத்தசாட்சி

அந்தியோகியா பட்டணத்தில்தான் இயேசுவின் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்னும் பெயர் முதல் முதல் வழங்கியது. அங்கேயிருந்த ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவனின் விசுவாசத்தைச் சோதிக்கும்படி ரோமர்கள் அவனை வதைத்துத் துன்பப்படுத்தி, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தி இரட்சித்த ஆண்டவரை மறுதலிக்கும்படி அவனைக் கட்டாயம் பண்ணினார்கள். அவன் தன் மரண உபாதையிலுங்கூட, கடவுள் ஒருவர்தான் என்றும் இயேசுகிறிஸ்து என்பவர் கடவுளுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர் என்றும் ஸ்திரமாய்ச் சொல்லித் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டான். ரோம சக்கிரவர்த்தியான காலேரியஸ் என்பவன் முன்னிலையில், சேவகர்கள் அவனை அடித்து அவன் தேகத்தைச் சின்னபின்னம் செய்தார்கள். அஞ்ஞானிகளின் பல தேவர்களை அவன் அங்கிகரிக்க வேண்டுமென்று, பலவிதமாய் அச்சேவகர்கள் அவனைப் பழித்ததற்கு பதில் சொல்ல அவனுக்குச் சக்தி போதவில்லை. கடைசியாய் அவன் அவர்களைப் பார்த்து, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின ஒரே கடவுளையும், அவரிடத்தில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்க வல்லவராகிய ஒரே இரட்சகரையும் வணங்குகிறது மேலானதா, அல்லது ரோமர்கள் சேவித்துவரும் பல தேவர்களையும் அதிபதிகளை யும் வணங்குகிறது மேலானதா என்று ஒரு சிறு குழந்தையை நீங்

கள் கேட்டால், அந்தக் குழந்தை தன் சொற்ப அறிவைக்கொண்டு அந்தக் கேள்விக்குத் தகுந்த உத்தரவு சொல்லும் என்றான்.

அச்சமயம் ஒரு ரோம ஸ்திரீ ஒன்பது வயதுள்ள தன் சிறுமகனைக் கையிற் பிடித்துக்கொண்டு, அந்த இரத்தசாட்சியின் துன்பக் காட்சியைப் பார்த்துப்போக வந்தாள். அவள் அங்கே வந்தது அவனைப் பார்த்துப் பரிதாபப்படவாவது, பாடுபடுகிறவனுக்கு உதவிசெய்யவாவது இருக்கலாம். ஆனால் கடவுள் அவளுக்கு நினையாத ஒரு சோதனையை அங்கே வரவிடப்போகிறதை அவள் அறிந்ததில்லை. இரத்தசாட்சியின் வார்த்தைகளை அங்கிருந்த நியாயாதிபதி கேட்டவுடன், அவன் கண்கள் அச்சிறு பையன்மேல் நோக்கமாகி, அவனைக் குறிப்பிட்டு அந்தக் கிறிஸ்தவனுக்குக் காட்டி, தன்னிடம் சொன்ன வார்த்தையை அந்தச் சிறு பையனுக்குச் சொல் என்றான்.

அவன் அதேவிதமாய்ச் சொல்லவே, மேற்படி சிறுவன் கேட்பவர் யாவரும் ஆச்சரியப்படும்படி, கடவுள் ஒருவரே என்றும், இயேசுகிறிஸ்துவும் பிதாவும் ஒருவரே என்றும், மறுமொழி கொடுத்தான்.

அந்த வார்த்தைகள் நியாயாதிபதியின் காதில் விழுந்தன. அதினால் அவன் கோபம் நியாயமானபடி தணிந்து தன் குற்றத்தை உணர்ந்துகொள்ளாமல், அவனுக்கு அதிக கோபம் வந்து மூண்டுகொண்டு, அது ஒரு தந்திரம் என்று சொல்லிச் சீறி, ‘நீசனும் துன்மார்க்கனுமான கிறிஸ்தவனே, அந்தப் பிள்ளை இம்மாதிரியான மறுமொழி சொல்ல நீ அதற்குக் கற்றுக்கொடுத்திருக்கிறா யல்லவா?’ என்று உரக்கச் சத்தமிட்டான். பிறகு அவன் அந்தப் பையன் முகமாய்த் திரும்பி, மிகவும் சாந்தமாய், ‘பிள்ளையே, இப்படிச் சொல்ல உனக்குக் கற்றுக்கொடுத்தது யார் என்று எனக்குச் சொல், மேலும் இந்த விசுவாசம் உனக்கு எப்படிப் படிந்தது?’ என்று கேட்டான்.

அப்போது பையன் தன் தாயின் முகத்தைப் பிரியத்தோடு பார்த்து, ‘என் அருமைத் தாயார் கடவுளுடைய கிருபையால் அதைக் கற்றுக்கொண்டு, இயேசுகிறிஸ்து சிறு பிள்ளைகளைச் சிநேகிக்கிறார் என்று எனக்குப் போதித்தாள். நமதுபேரில் அவர் வைத்த அன்புக்காக நான் அவரைச் சிநேகிக்க கற்றுக்கொண்டேன்’ என்றான்.

அப்படிச் சொல்லவே அந்தக் கொடுமையுள்ள நியாயாதிபதி, ‘கிறிஸ்துவின் அன்பு உனக்குச் செய்யப்போகிறதை நான் இப்போது பார்க்கிறேன்’ என்று சத்தம்போட்டு ஜாடைகாட்ட, வழக்கப்படி கத்திகளோடும் தடிகளோடும் தயார்ராய் நின்றுகொண்டிருந்த ரோம போர்ச்சேவகர், உடனே பையனைப் பிடித்துக் கட்டினார்கள்.

அதைப் பார்த்திருந்த தாயானவள் தனது பயந்த குழந்தைக்காகத் தன் உயிரையே சந்தோஷமாய்க் கொடுத்துத் தப்பவிட்டிருக்கலாமே. ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. கிறிஸ்துவின் அன்பில் உறுதியாயிருந்து உண்மையைப் பேச அவனுக்கு அவள் இரகசியமாய்ச் சொன்னாள். பையன் பலவீனமும் பயங்காளியுமா யிருந்ததால், கிறிஸ்துவின் அன்பில் உறுதியாய் ஊன்றி நின்றான். ஆக்கினை செய்வோன் அவனைப் பலவிதமாய்த் துன்பப்படுத்திப் பார்த்தும், அவருடைய அன்பிலிருந்து அவனைப் பிரிக்கக்கூடவில்லை.

அடித்த அடியினால் பையனின் மெதுவான சதையிலிருந்து, இரத்தம் ஓடிவருகையில், நியாயாதிபதி, 'இப்போது கிறிஸ்துவின் அன்பு இவனுக்கு என்னசெய்யும்?' என்று கேட்டான்.

'அவனுடைய பரம எஜமான் அவனுக்காகவும், மற்றெல்லாருக்காகவும் பாடுபட்டு உத்தரித்தது, அவனையும் பட்டு உத்தரிக்கச் செய்கிறது' என்று பிள்ளையின் தாய் மறுமொழி சொன்னாள்.

கிறிஸ்தவ தாயின் மனதை அதிகமாய் நோகச்செய்ய, அவர்கள் பையனை மறுபடியும் அடித்து, 'கிறிஸ்துவின் அன்பு இவனுக்கு என்னசெய்யும்?' என்று திரும்பக் கேட்டார்கள். அங்கே நின்றிருந்த அஞ்ஞானிகளும் கண்ணீர் விட்டார்கள். ஆனால் தன் மகனைவிட ஆயிரம் பங்கு அதிகமாய் மனவதையுண்ட தாயானவள் 'தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களை மன்னிக்க அது அவனைப் போதிக்கிறது' என்றாள்.

தன் தாயின் கண்கள் தனக்காக வேண்டியே வானத்திற்கு ஏறெடுப்பதை பையன் கவனித்து, அவள் அவனுக்குச் சொல்லியிருந்த தன் அருமை இரட்சகரின் பாடுகளை நினைவுகூர்ந்தான். அவனைத் துன்பப்படுத்துகிறவர்கள், 'நாங்கள் சேவித்துவரும் தேவர்களை இப்பொழுதாகிலும் நீ ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவை மறுதலிக்கமாட்டாயா?' என்று பையனைக் கேட்டதற்கு, அவன் 'இல்லை, கடவுள் ஒருவர் தவிர வேறு தேவன் கிடையாது; இயேசுகிறிஸ்துதான் இந்த உலகத்தின் மீட்பர், அவர் என்னைச் சிநேகித்தார், அவருடைய நேசத்துக்காக நான் அவரைச் சிநேகிக்கிறேன்' என்று பிடிவாதமாய்ச் சொன்னான்.

அப்போது ஓயாமல் அடித்ததினால், அவன் மூர்ச்சை போனதை அவர்கள் கண்டு, சிதைவுண்ட அவன் தேகத்தை அவன் தாயின்மேல் தூக்கி எறிந்து, 'உங்கள் கிறிஸ்துவின் அன்பு அவனுக்கு இப்பொழுது செய்ததை நீயே பார்' என்றார்கள்.

உடனே தாயானவள் துயரத்தால் நொறுங்குண்ட தன் மார்பில் பையனை மெதுவாய்ச் சேர்த்து அணைத்துக்கொண்டு, 'கிறிஸ்துவின்

அன்பு மனிதர் மூர்க்கத்திலிருந்து மோட்ச சமாதானத்திற்கு அவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்' என்றாள்.

பையன் உயிர்விடும்போது, தாயைப்பார்த்து: 'அம்மா, நமது குளிர்ந்த கிணற்றிலிருந்து ஒரு துளி தண்ணீர் கொண்டுவந்து, என் நாவை நனையுங்கள்' என்று அழுதான்.

பிறகு அந்தச் சிறு இரத்தசாட்சி வாய்திறந்து பேசவில்லை. அப்பொழுது தாய், 'என் அருமைப்பிள்ளையே, நித்தியஜீவனுக்கென்று ஊறும் கிணற்றிலிருந்து நீ முன்னமே குடித்தாயிற்று. கிறிஸ்துவின் அருள் அவருடைய சிறு இரத்தசாட்சியாகிய உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரைப் பற்றும் அன்பினால் நீ உண்மையே பேசியிருக்கிறாய். இப்போது எழுந்திரு, இரட்சகர் உன்னைக் கூப்பிடுகிறார். பாக்கியம் பெற்ற சிறு இரத்தசாட்சியே, உன் பிரகாசமான வழியை உன் தாயும் பின்பற்ற, அவர் தமது அருளை அவளுக்கும் தந்தருள்வாராக' என்று சொன்னாள்.

முடிவிலே சிறுவன் தன் கண்களை மெதுவாய் ஏறெடுத்து முந்தின இரத்தசாட்சி கிடக்கும் இடத்தை நோக்கி, ஒரே கடவுள் உண்டென்றும், இயேசுகிறிஸ்துதான் அவரால் அனுப்பப்பட்டவர் என்றும் திரும்பவும் சொல்லிக்கொண்டே உயிர்விட்டான்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1919-௵ செப்டெம்பர்௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | மாற். | 10. 28—40 | 11 | வி. | மாற். | 14. 1—16 | 21 | ஞா. | 2 ராஜா. | 2. 1—16 |
| 2 | செ. | ,, | 10. 41—52 | 12 | வெ. | ,, | 14. 17—31 | 22 | தி. | ,, | 3. 1—17 |
| 3 | பு. | ,, | 11. 1—18 | 13 | ச. | ,, | 14. 32—45 | 23 | செ. | ,, | 5. 1—14 |
| 4 | வி. | ,, | 11. 19—33 | 14 | ஞா. | ,, | 14. 46—59 | 24 | பு. | ,, | 6. 1—11 |
| 5 | வெ. | ,, | 12. 1—12 | 15 | தி. | ,, | 14. 60—72 | 25 | வி. | ,, | 6. 12—25 |
| 6 | ச. | ,, | 12. 13—27 | 16 | செ. | ,, | 15. 1—15 | 26 | வெ. | ,, | 7. 1—11 |
| 7 | ஞா. | ,, | 12. 28—44 | 17 | பு. | ,, | 15. 16—32 | 27 | ச. | ,, | 7. 12—22 |
| 8 | தி. | ,, | 13. 1—13 | 18 | வி. | ,, | 15. 33—47 | 28 | ஞா. | ,, | 8. 11—18 |
| 9 | செ. | ,, | 13. 14—27 | 19 | வெ. | ,, | 16. 1—20 | 29 | தி. | ,, | 9. 1—12 |
| 10 | பு. | ,, | 13. 28—37 | 20 | ச. | 2 ராஜா. | 1. 1—13 | 30 | செ. | ,, | 9. 20—31 |

C. L. S. PRESS, MADRAS—1919